# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 12 DECEMBER 15, 2002 பாலம் 24


3வது இதழ் வெளிவந்துவிட்டது

உலகத் தமிழோசை

அடக்கு அல்லது அடங்கிப்போகும் சுகாதாரவாழ்வு



அன்பர்கள், நண்பர்கள், விளம்பரதாரர்கள் யாவருக்கும் மனம் நிறைந்த

நத்தார் நல்வாழ்த்துக்கள்

- விளம்பரம் பப்ளிகேஷன்ஸ்

## வசந்தா நகை மாளிகை

Since 1987

வசந்தன் பத்தர் - பத்மநாதன் பத்தர்

Tel: 905-848-5151
Fax: 905-848-8502
10:00AM-8:30PM
திங்கள் மூடப்படும்

3025 HURONTARIO ST.
UNIT 103A
MISSISSAUGA, ON
L5A 2H1 CANADA


- நீங்கள் சமூகநல உதவி (Welfare, Family Benefits, Disability, Old age Security, CPP Income) பணம் பெறுபவரா?
- நீங்கள் April 2003 வரை உங்கள் வருமான வரி மீளளிப்புக்காக (Tax Refund) காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை! [விபரம் உள்ளே!]
- பிந்தி விட்டீர்களா? [விபரம் உள்ளே!]

உடனடி வருமான வரி மீளளிப்பு
INSTANT TAX REFUND

## LIBERTY INCOME TAX

உடனடி வருமான வரி மீளளிப்பு இல்லம்

## Singapore Communication



Only $30.00/m
- Reliable & Friendly Service
- 50 mins day time Free
- Evenings & Weekend Free
- Every Day (12 noon-1p.m) Free
- c/w, c/c, v/m free
- Add.Daytime min 0.30ctsonly

**Unlimited Tallking* $50.00 /m**

- u/L Incoming call 500 mins outgoing*
- Up to $150.00 Hardware rebate in store

Store: 416-740-5292

Buy One Cell Accessories & Get Second One ½ Price

5010 Steeles Ave. W., Unit 17ABC - Kipling & Steeles



## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

**ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்**
திங்கள் - வியாழன் காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarborough, ON.



## Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel + Business

Liberty Mutual London Life

•416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

## துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ் - 416.267.8221


VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ON. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059, FAX: (416) 282-4978 e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் 116

**விஜய குலத்துங்கம்**



உலகில் வெளிவந்த தொடர் படங்களில் நீண்ட காலமாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டு இருக்கும் படம் ஆங்கிலத் திரைப் படமான James Bond - ஜேம்ஸ் பொண்ட் படங்களாகும். 1962ஆம் ஆண்டு வெளிவந்த Dr. No வைத் தொடர்ந்து சென்ற மாதம் நவம்பர் 22ஆம் திகதி வெளிவந்த "Die another day" என்ற படம் வரை 22 படங்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் உத்தியோக பூர்வமான ஜேம்ஸ் பொண்ட் படங்கள் 20 ஆகும். இந்த ஜேம்ஸ் பொண்ட் படங்களில் ஜேம்ஸ் பொண்ட் பல விஞ்ஞான கருவிகளையும், ஆயுதங்களையும் உபயோகிப்பார். 40 வருடங்களுக்கு முன்னர் இருந்து ஒவ்வொரு படத்திலும் புதுப்புதுக் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில் கற்பனையாக இருந்த கருவிகள் தற்போது நடைமுறையில் நிஜமாக வந்துள்ளன.

பொண்ட் படங்களில் வரும் சாதனங்களை உருவாக்குபவர்கள் Mr. Q என்பவர் ஆவார். இவரும் இவரது ஆய்வுக் கூடமும் இவர் தயாரிக்கும் ஆயுதங்களும், கருவிகளும் இல்லாவிட்டால் எப்போதோ ஜேம்ஸ் பொண்ட் இறந்திருப்பார் என நகைச் சுவையாக இரசிகர்கள் கூறுவார்கள். 1963ஆம் ஆண்டு வெளிவந்த From Russia with Love என்ற படத்தில் இருந்து 1999ஆம் ஆண்டு வரை வெளிவந்த The World is not enough என்ற படம் வரை அனைத்துப் படங்களிலும் Desmond Llewelyn என்ற நடிகர்தான் Mr. Q என்ற பாத்திரத்தில் நடித்திருந்தார். 99ஆம் ஆண்டு படத்தில் நடித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் தனது 85வது வயதில் ஒரு விபத்தில் இறந்தார்.

From Russia with Love என்ற படத்தில் pager போன்ற கருவி ஒன்று உபயோகிக்கப்பட்டது. இக்கருவி Beep பண்ணும்போது Bond தலைமையகத்திற்கு தொலைபேசியில் அழைக்க வேண்டும். 1963ஆம் ஆண்டு கற்பனையாக இருந்த கருவி தற்போது பல விசேட அம்சங்களுடன் பலரால் உபயோகிக்கப்படும் பொருளாகிவிட்டது. இந்தப் படங்களில் வந்த சில கருவிகள் உணமையில் உருவாக்கக் கூடியதா என ஆராய்வோம். முதலில் 1999இல் வெளிவந்த "The world is not enough" என்ற படத்தில் Bond or Blue - x - Ray எனப்படும் ஒரு கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தார். இக் கண்ணாடி எக்ஸ்ரே போன்று உடுப்புகளுக்குள் ஒளித்து வைத்திருக்கும் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களைப் பார்ப்பதற்கு உதவும். சுவருக்கு அப்பால் உள்ளவற்றையும் பார்க்க முடியும் எனக் கதையின் படி இருக்கும். ஆனால் உண்மையில் இது சாத்தியமாகுமா? ஆனால் எக்ஸ்ரேயின் தொழிற்பாட்டை சற்று மிகைப்படுத்துவதாகவே உள்ளது. X-ray ஒரு வகை மின்காந்த கதிரியக்கம் ஆகும். x-ray ஆனது வைத்தியத் துறையில் எலும்புகளையும், உறுப்புகளையும் படம் பிடிக்க உதவுகின்றது. விமான நிலையங்களிலும், மற்றைய இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இது உதவுகின்றது. கையில் கொண்டு செல்லும் பொதிகளில் துப்பாக்கி, கத்தி போன்றவற்றைக் கண்டறிய இது உதவும். ஆனால் படம் பிடிக்கும் போது பொருட்கள் சில செக்கன்கள் பொருட்கள் அசையாமல் நிற்க வேண்டும். விமான நிலையங்களில் பொதிகளை நீங்கள் பெல்ட் ஒன்றில் வைக்கும் போது அசைந்து சென்று உள்ளே ஒரு இடத்தில் சில செக்கன்கள் அசையாமல் நிற்கும் போதே படம் பிடிக்கப்படுகின்றது. எனவே Bond படத்தில் வருவது போன்று அசைந்து செல்லும் உருவங்களை x-ray இனால் பார்க்க முடியாது. இதற்கு பொருத்தமானது Ultrasound சாதனம் தான். கர்ப்பிணிப் பெண்களில் வயிற்றுள் இருக்கும் குழந்தையை படம் பிடிக்கும் தொழிற்நுட்டபத்தை உபயோகித்து ஒரு சிறு கருவியை தயாரித்தால் அதன் மூலம் பார்க்க முடியும். Ultrasound கருவியில் இருந்து ஒலி அலைகள் வெளிப்பட்டு குறிப்பிட்ட ஒரு பொருளில் பட்டுத் தெறித்து திரும்பி வருவதை படமாக வெளிக்காட்டும் போது அந்தப் பொருளின் வடிவம் தோன்றும்.



1985இல் வெளிவந்த A view to kill என்ற படத்தில் றிமோட் கொன்ரோல் மூலம் இயங்கக் கூடிய வேவு பார்க்கக் கூடிய ஒரு சாதனம் வந்தது. Snooper என்று பெயரிடப்பட்ட ஆமை போன்ற சாதனத்தில் வீடியோ கமராக்கள், மைக்குள் பொருத்தப்பட்டிருக்கும். வீட்டிற்குள் புகுந்து எல்லாவற்றையும் படம் பிடித்து, ஒலிப் பதிவுகளையும் செய்யக் கூடியதாக இருந்தது. செம்ரெம்பர் 11இல் நியூயோர்க்கின் இரட்டை மாடிக் கட்டிடங்களின் இடிபாடுகளுக்கிடையே அகப்பட்ட மனிதர்களைக் கண்டுபிடிக்க இதைப் போன்று பல இயந்திர ரோபோட்டுகள் உபயோகிக்கப்பட்டன. இதில் பிரகாசமான விளக்குகளும், சென்சர்களும், வீடியோ கமராக்களும் பொருத்தப்பட்டிருந்தன. இவை றிமோட் கொன்ரோல் மூலமும், கேபிள்கள் மூலமும் இயக்கப்பட்டன. இவற்றுள் சில கங்காருக்கள் போன்று சில குட்டி ரோபோட்டுகளை வாய்க்குள் காவிச் சென்றன. பெரிய ரோபோட்டுகள் போக முடியாத சிறிய இடைவெளிகள் இருக்குமிடத்தில் இவை குட்டி ரோபோட்டுகளை கக்கி விடுகின்றன. வயிற்றுள் குட்டி ரோபோட்டுகளை காவிச் செல்வதால் Marsupial robots என அழைக்கப்படுகின்றன.

1965இல் வெளிவந்த Thunderball என்ற படத்தில் Jet pack என்ற கருவி வந்தது. காரின் பின்புற டிறங்கில் வைக்கக் கூடிய, முதுகில் காவிச் செல்லக் கூடிய Bag அளவில் இருக்கும். பொண்ட் இதை முதுகில் அணிந்து இயக்கியவுடன், அது அவரைத் தூக்கி பறக்கச் செய்து தூரத்தில் உள்ள அவரது காரிடம் கொண்டு செல்லும். இக்கருவி உண்மை யாகவே பின்னர் Bell textroll என்ற நிறுவனத்தினால் அமெரிக்க இராணுவத்திற்காக தயாரிக்கப்பட்டது. கூடிய அமுக்கத்தில் அடைக்கப்பட்ட நைதரசன் வாயு சிறிய nozzle ஊடாக வெளிப்படும் போது ரொக்கெட் போல இயங்கி 30 அடி உயரத்திற்கு மணித்தி யாலத்திற்கு 11-16 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கக் கூடியது.

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)


நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

**கவலையை விடுங்கள்**

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற



**Vitaplex**

**சம்போ அன்ட் கன்டிஷனர்**

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.



Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable taxes Extra

**கிடைக்கும் இடங்கள்**

ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாகா எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.



**வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?**




வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.

முற்றாக ஒழிக்க அழையுங்கள்.



- No Spraying
- No Smelling
- No Moving



**Call: Kanthan** **Tel: 416-283-9538**




# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z
கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் Truck DRIVING பயிற்சி இடம் (8ஆம் ஆண்டு) வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We Accept Welfare & Unemployment Insurance**




* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

***In Classes***

* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

**சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:**

**YOGAN SOCKALINGAM Truck Driving** போதனாசிரியர்
**(15 Years Canadian Experience with Trucks)**
**250 Summerlea Road, Brampton, ON**
**(905) 793-9546 / (416) 616-5979**

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing

* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**
**435 Midwest Road. Unit B5,**
**Scarborough, ON. M1P 3A6**

SPECIAL




## அறிவும் ஆக்கமும்

(2ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஆனால் 30 செக்கன்கள் மாத்திரமே பறக்கக் கூடியதால் இது தற்போது உபயோகிக்கப்படுவதில்லை. 1984இல் லொஸ் ஏன்ஜலிஸில் நடந்த ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நாள் விழாவின் போது, வேடிக்கை விநோதத்திற்காக இது உபயோகிக்கப்பட்டது.

பொண்டின் மேலும் சில விஞ்ஞான கருவிகள் பற்றி அடுத்த இதழ்களில் ஆராய்வோம்.

* * * *

விஜே குலத்துங்கத்தின் தயாரிப்பில் நடக்கும் விஞ்ஞான நிகழ்ச்சியான "விஞ்ஞானமும் நாமும்" என்ற நிகழ்ச்சியை இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறை TVI தொலைக்காட்சியில் செவ்வாய் இரவு 8:00 மணிக்கு பார்க்கலாம்.

* * * * *

“அறிவும் ஆக்கமும்” பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.

## அருள்விருந்து

* நீரினுள் அமிழ்த்தப்பட்டவன் சுவாசத்துக்காகத் திணறுகிறான். அங்ஙனம் நீ கடவுளை அடையக் காமுறு.

* இணக்கம் ஒன்றும் வேண்டாம். ஏகாந்தத்தை நாடு. அது உனக்கு இயலாவிட்டால் நல்லார் இணக்கத்தை நாடு.

* காய்ந்த இரும்பு சம்மட்டியால் அடியுண்டு உருமாறுகிறது. உணர்வோடு கூடிய உள்ளம் எண்ணத்தால் உருமாறுகிறது.

* நீ சிரிக்கும் போது உலகெல்லாம் உன் சிரிப்பில் கலந்து கொள்கிறது. ஆனால் அழும்பொழுது நீ தன்னந்தனியானய் அழுகிறாய்.

* புறநாடுகளில் பயணம் போகின்றவன் எச்சரிக்கையாயிருக்கிறான். உலக விஷயங்களில் அங்ஙனம் சான்றோன் எச்சரிக்கையாயிருக்கிறான்.

## யாழ்ப்பாணச் சங்கதிகள்

பிரிந்துணர்வு நீங்கி
புரிந்துணர்வு ஏற்பட
புதுப்பொலிவு கண்டது யாழ்ப்பாணம்
பாதைகள் திறந்தன
பயணங்கள் பெருகின
பந்தங்கள் தோன்றின
சொந்தங்கள் மலர்ந்தன
பலரிங்கே வந்தனர்
பார்த்தேங்கிச் சென்றனர்.

முதலீட்டாளர்கள்
மும்முராய் வந்தனர்
முறையாக வாய்ப்பை
ஏற்படுத்திக் கொண்டனர்.
விநயமாக பலவழியால்
விளம்பரமும் செய்தனர்.

பாதையோர விற்பனையோ
படுஉசாராய் நடக்குது
தரமற்ற பொருட்களும்
தரமாக்கும் வித்தைகளும்
தேடுவாரற்றையும்
தேவலோகப் பொருளாகி
தேடிப்பெறும் விந்தையை
தெருவெங்கும் காணலாம்.

இன்றைய யாழ்ப்பாணத்தில்
இங்கிதமற்றுப்பல
சக்கதிகள் நடக்கிறது
வார்த்தையில் வடிபடாத
வக்கிரங்கள் ஏராளம்.
இன்றைய யாழ்ப்பாணம்
இழையும் இப்பாதையில்
தப்பாது செல்வது
தடுக்கப்பட வேண்டியது

-குகதாசர்மா சிவகுமார்


நன்றி
தாயகம் (யாழ்ப்பாணம்)


# WINDOW COVERING

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

BLINDS DRAPERIES AND SHUTTERS
• Venetian Blinds
• Vertical Blinds
• Roller Shades
• Pleated Shades
• Cellular Shades

FREE ESTIMATE



இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

விபரங்களுக்கு: என். செல்வம்
416.332.8482 /416.419.9247 / 905.201.7733




## “சிரிப்பதனால்.... மனிதன் நீண்டகாலம் உயிர் வாழ்கிறான்.”





# வெகுவிரைவில் திரைக்கு வருகிறது


கலகலப்பு தீசனின்



# "கலகலப்பு"

முழு நீள நகைச் சுவை சித்திரம்

இயக்கம்: S. மதிவாசன்
இசை: பவதாரணி மதிவாசன்






• கள்ளக் வீடியோ கொப்பி சட்டத்திற்குப் பிழை
• கள்ளக் கமறா கொப்பி கண்ணுக்கு கூடாது



# ஆரோக்கிய வாழ்வு

## N. செல்வசோதி



### வயிற்றில் வாயு, வலி சிகிச்சை முறைகள் (Gas Problem)

இரைப்பை, குடல் கேட்டினால் அப் பாகங்களில் வாயு (Gas) உருவாகும். இது குடலைப் பெருக்கச் செய்து வெளியேறாது நிற்கும் பொழுதும் வெளியேற முயற்சிக்கும் போதும் வலி ஏற்படும். இரைப்பையில் உண்டாகும் வாயு, வாய் மூலம் ஏப்பமாக சத்தத்துடன் வெளியேறும். இதில் நாற்றமும் இருக்கலாம், புளிப்பும் வரலாம். இதன்போது வாயிலிருந்து துர்நாற்றம் வீசலாம்.

<u>குடலில் வாயு</u>

இது பெருங்குடலில் உருவாக சிறு குடலுக்குள் பாயலாம். இந்தக் காலத்தில் உள்ளே ஏதோ புகுந்து உருட்டுவது போல அனுபவம் ஏற்படும்.

எந்த உணவை உண்டாலும் இரைப்பையும் குடலும் வாயுவை உருவாக்கும். முக்கியமாக இனிப்பு நிறைந்த பொருட்களும், கடலை பருப்பு போன்றவைகளும் வாயுவை உண்டாக்கும்.

<u>வாயுத்தொல்லை ஏற்படக் காரணங்கள்</u>

1. மென்று உண்ணாமல் விழுங்குதல்.
2. பசியில்லாத போது உண்ணுதல்.
3. அடிக்கடி உண்ணுதல் அதிகமாக புலால் பருப்பு மாப் பண்டங்களை உண்ணுதல்.
4. வறுத்து தாளித்த உணவு, கிழங்குகள் அரிசி போன்றவற்றை அதிகமாக உண்ணுதல்.
5. காலியான வயிற்றோடு காப்பி குடித்தல்.
6. மலம் நேரத்திற்கு வெறியேறாதிருப்பதால்.
7. நேரம் தவறி உணவு உண்டகொள்ளல்.


<u>உணவு முறை</u>

அரிசி உணவுக்குப் பதிலாக கோதுமையை உணவாகக் கொள்ளலாம். பச்சைக் காய்கறிளையோ அல்லது அரை அவியலாகவோ உட்கொள்ளலாம். மதிய உணவில் வெள்ளைப்பூடும் இரவு உணவில் இஞ்சியும் அதிகம் சேர்த்து வரவேண்டும். அத்துடன் எளிதில் ஜீரணிக்கக் கூடிய உணவை உண்ண வேண்டும்.

உணவை நன்றாக மென்று உமிழ்நீருடன் கலந்தபடி உண்ண வேண்டும்.
நோய் தீரும் வரை புகைபிடிப்பதையும் மது அருந்துவதையும் நிறுத்துவது சிறந்தது.



ஹலாசனம்



தனுராசனம்

சிகிச்சைத் திட்டம் (ஆசனங்கள்)

| ஆசனம் | முறைகள் | நிறுத்திம் காலம் |
|---|---|---|
| தனுராசனம் | 4 | 4 முதல் 25 வினாடி |
| பட்சிமொத்தாசனம் | 4 | 5 முதல் 15 வினாடி |
| ஹலாசனம் | 3 | 5 முதல் 25 வினாடி |
| சர்வாங்காசனம் | 2 | 20 முதல் 159 வினாடி |
| சிரசாசனம் | 1 | 30 முதல் 90 வினாடி |
| நாடிசுத்தி | 5 முதல் | பத்து நிமிடம் |



சிரசாசனம்


# CHANKANAI FLOORING

• LAMINATE • HARDWOOD • CARPET FLOORING
(PROFESSIONAL INSTALLATION & SALES)



SPECIAL
LIVING ROOM: From $799*
(Wood + Labour)

Carpetஇலிருந்து நிவாரணம் பெற
Laminated Floor Hardwood

Call: Raj 416-918-1624 Thaya 416-830-3929



## என் பணி "கடன்" செய்து கொடுப்பதே

# GOOD, BAD OR NO CREDIT*



* வீடு வாங்க அடமானம் • 1st 2nd & 3rd Mortgages
* குறைந்த வட்டி வீதத்தில் புதுப்பித்தல் • Low Rates for Renewals
* வருமானத்தை நிரூபிக்க முடியாத நிலை • Unable to prove income*
* கடன் நிலைப் பிரச்சினை • Credit Rating Problems*
* வீடு திருத்தக் கடன் • Home Renovation Loan
* முதலீட்டுக் கடன் • Investment Loan

* Subject to sufficient equity

N. MURUGADAS
MORTGAGE SPECIALIST

SAVERS MORTGAGE
TAILORED TO FIT YOUR NEEDS

416.543.6614

RES: 905.608.1218

கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்குதல் இனி அவசியமில்லை



# CANADIAN SCHOLARSHIP TRUST PLAN



*Valepuram Gugan*

* Depository The Royal Bank
* TrusteeThe Royal Trust
* President John Kearns
* Enrolment Director Bruce Winsor
* Representative Valepuram Gugan

• கனடாவில் 1960ஆம் ஆண்டு முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமும்
• இலாப நோக்கமற்ற RESP நிறுவனமும்
• இன்றுவரை $1Billion முதலும் புலமைப் பரிசாகவும் வழங்கிய நிறுவனமும்
• நான்கு வருடங்களுக்கு புலமைப் பரிசு வழங்கும் நிறுவனமுமாகிய CSTஇல் இணைந்து அரசாங்கம் வழங்கும் 20% நன்கொடைப் பணத்தையும் பெற்று உங்கள் மழலைகளின் கல்விச் செல்வத்தை மேம்படுத்த பல நற்திட்டங்களை உள்ளடக்கி மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனமாகிய

**Canadian Scholarship Trust Plan**
இல் இன்றே இணைந்து கொள்ளுங்கள்.

"நமது இனம் தலைநிமிர்ந்து வாழவேண்டுமேயானால் நமது மழலைகளின் கல்விச் செல்வம் பாதுகாக்கப்பட வேண்டும்"

# வல்லிபுரம் குகன்

Tel: 416-838-4856/416-297-8507



# இன்சூரன்ஸ் (Insurance)

## பகுதி - 14

"இன்சூரன்ஸ்" என எல்லோராலும் என்றும் பேசப்படுவது தமிழில் "காப்புறுதி" என்னும் சொல்லினுள் அடங்கும். 'காப்புறுதி' என்றால் 'இழப்பீடு' அதாவது 'பாதிப்பு நிவாரணம்' எனப் பொருள்படும். அனேகமாக ஒரு மனிதனுக்கு ஏற்படும் பல்வேறு வகையான இழப்புகளுக்கும் காப்புறுதி செய்து கொள்ளலாம். அவையாவன பின்வருமாறு:

* வாகனக் காப்புறுதி (Auto Insurance)
* ஆயுள் காப்புறுதி (Life Insurance)
* கடுமையான நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness Insurance)
* உடல் இயலாமைக்கான காப்புறுதி (Disability Insurance)
* முதலீட்டுக் கடன் அடமானக் காப்புறுதி (Mortgage, Loan Insurance)
* வீட்டு காப்புறுதி (Home Insurance)
* பொருட்கள் சொத்துகளுக்கான காப்புறுதி (Property Insurance)
* பற்சிகிச்சை காப்புறுதி (Dental Insurance)
* மருத்துவ செலவு காப்புறுதி (Medical Insurance)
* வியாபார காப்புறுதி (Business Insurance)
* வியாபார பங்குதாரர்களுக்கிடையேயான காப்புறுதி (Buy & Sell Agreement Insurrance)
* தொழில் வர்த்தக மேலதிக செலவுகளுக்கான காப்புறுதி (Business Overhead Expenses Insurance)
* Professional Negligence Insurance (தொழில் தவறு நட்டஈட்டு காப்புறுதி)

சென்றவாரத் தொடர்ச்சி.....

என்றோ ஒரு நாள் மனிதனுக்கு ஏற்படும் மரணத்தின் பின்பு அவரின் பிள்ளைகள், அதனைத் தொடர்ந்த வம்சா வழியினருக்கு கிடைக்கும் இப் பெரிய முதலீட்டு பணத்தின் மூலம் தமது பிள்ளைகள் சந்ததியினரை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நிலைமைக்கு உருவாகவிடாமல் வசதியாக வாழும் நிலைமைக்கு ஓர் அத்தி வாரம் ஒன்றினை எதிர்கால சந்ததியினருக்கு உருவாக்கி விட்டு இந்த உலகினை விட்டு விட்டுப் போகலாம்.

மேற்குறிப்பிட்ட நோக்கில் ஆயுள்க் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேருபவர்கள் நிச்சயமாக முதலாவது பிரிவில் குறிப்பிடப்பட்ட வாழ் நாள் முழுவதும் உள்ள ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத் திட்டத்திலேயே சேர வேண்டும். ஆனால் இதற்கு மாதா மாதாம் செலுத்தும் கட்டுப் பணம் சற்று அதிகமாகவே அவரவர் வயதிற்கு ஏற்ற மாதிரி இருக்கும்.

இது ஒப்பந்தத்தில் சேர்ந்த நாளில் இருந்து வயதான நிலைமையில் மரணத்தினைத் தழுவும் நிலைமை வரை ஒரே விலையாக இருக்கும்.

சிவ பஞ்சலிங்கம், B.Com.
(Licensed Insurance Broker by the Ontario Insurance Commission)
416-321-0999

2. இரண்டாவது நோக்கம் பிள்ளைகள் குடும்பம் என்ற தமது மிகப் பெரிய பொறுப்பு ஒன்றில் இருந்து விடுபடும் வரை அதாவது பொறுப்புகளை சுமந்த வண்ணம் இருக்கும் ஒரு தாய் அல்லது தகப்பன் மரணத்தினை எதிர் கொள்ளும் சந்தர்ப்பத்தில் அவ் இழப்பினால் தமது குடும்பம் நிதி நிலைமைகளை எதிர் கொள்ளக் கூடாது என்ற நோக்கில் மேற்கொள்வதாகும்.

இத்தகைய நோக்கத்தில் உள்ளவர்கள் இரண்டாவது மிகப் பெரிய பிரிவான **"Term Life Insurance"** என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் தற்காலிக ஆயுள்க் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்ளலாம். இத்தற்காலிக ஆயுள்காப்புறுதி ஒப்பந்தம் என்பது குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு இடையில் மரணம் என்பது நடந்தால் மட்டும் கொடுப்பனவு கிடைக்கும். இவ் ஒப்பந்தத்தில் மாதம் மாதம் செலுத்தும் கட்டுப் பணமும் குறைவானதாக இருக்கும். இத் தற்காலிக ஒப்பந்தத்திலும் பல்வேறு வகைகள் உண்டு.

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேராமல் அல்லது ஆறுதலாக சேர்ந்து கொள்வோம் என நினைப்பவர்கள் இரு பெரிய பிரச்சனைகளை எதிர் கொள்கின்றார்கள்.

1. வயது அதிகரிக்க அதிகரிக்க மாதக் கட்டுப் பணமும் அதிகரித்துக் கொண்டே போகும்.

2. உடல் நிலைமையில் ஏதாவது நோயால் பாதிக்கப்படும் நிலைமைகள், அல்லது "நோய்" என்ற அம்சம் உடலில் ஏற்பட்டால் ஆயுள்க் காப்புறுதி ஒப்பந்தங்களில் மாதப் பணம் வழமையான வயதில் செலுத்துவதினை விட பல மடங்குகள் அதிகமாகவோ அல்லது நோயின் தன்மை அதிகமாக இருக்கும் போது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட சம்பவங்களும் ஏற்படும்.

குருதியில் கொழுப்புச் சத்து, சீனியின் அளவு, இரத்த அழுத்தங்கள் ஆகியவை பாதகமாக இருப்பதனால் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர்க்க முடியாது நிராகரக்கப்பட்டவர்களும் இவ்வாறு சேரமுடியாத நிலைமையில் கவலைப்படுபவர்களும் நாம் எங்கள் தொழிலில் கண்ட அனுபவங்கள் ஆகும்.

எனவே நிதி நிலைமையில் சிரமமாக இருப்பவர்கள் விலை குறைந்த மாற்றியமைக்கக் கூடிய தற்காலிக ஆயுள்க் காப்புறுதி ஒப்பந்தகங்களிலேனும் காலதாமதம் இல்லாமல் சேர்ந்த பின்னர் நிதி நிலைமைகள் சாதகமாக வரும் எதிர் காலங்களில் விரும்பினால் நிரந்தர பத்திரமாக எதுவித மருத்துவ பரிசோதனைகள் என்ற பிரச்சனைகளும் இல்லாது மாற்றியமைத்துக் கொள்வதே வாழ்வின் மிக சிறந்த முடிவாகும்.

## திருக்குறள்



296. **பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை**
**எல்லா அறமுந் தரும்.**

பொய் இல்லாமல் வாழ்வது போன்ற புகழ் மிக்க வாழ்வு வேறு எதுவுமில்லை; என்றும் நீங்காத அறவழி நலன்களை அளிப்பது அந்த வாழ்வேயாகும்.

297. **பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று.**

செய்யக்கூடாததைச் செய்யாததால் விளையும் நன்மையைவிடப் பொய் கூறாத பண்பு பொய்த்துப் போகாமல் கடைப்பிடிக்கும் அறவழி நன்மை தருவதாகும்.

இளங்கதிர்

சிறுவர்களுக்காக, கனேடிய இளங்கலைஞர்கள்
பொருமையுடன் படைக்கும் இளங்கதிர் உதயம் 4

இரண்டு ஆண்டுகளில் 4 வயதையடையும் இளங்கதிர்
ஒரு பாரதி ஆர்ட்ஸின் தயாரிப்பு

ஒளி வடிவில் கதை, பாடல், நடனம், நாடகம், இசை, கவிதை

இளங்கதிர் ஒளியிழை நாடா வெளியீட்டுவிழா

December 28th 2002 6:00pm

**MEGA Banquet Hall**
3330, Pharmacy Ave. Scarborough Ont.
(Pharmacy & McNicoll)

(416) 457-8224
(416) 492-5589
(416) 318-5196

# நிதியும் மூலதனமும்

Credit Card இல் உள்ள கடனுக்கு வட்டி அதிகமாக செலுத்துகின்றீர்களா? அதைக் குறைப்பதற்கான சுலபமான வழிகளில் ஒன்று!.

ஒவ்வொரு மாதமும் statement வந்தவுடன், மிக குறைந்தளவு பணமோ (minimum payment amount) அல்லது கூடிய தொகையோ செலுத்துவீர்கள். இதற்குப் பதிலாக ஒவ்வொரு 14 நாட்களுக்கு ஒரு தடவை பணம் செலுத்துவீர்களானால் உங்கள் வட்டிக்கு செலுத்தும் பணம் குறைவாகக் காணப்படும். ஏனெனில் Credit Cardஇல் உள்ள Balance இற்கு நித்திய வட்டியாகவே கணிக்கப்படுகிறது. இதனால் 14 நாட்களுக்கு ஒரு தடவை கொடுப்பனவு செய்யும் போது அவ் வட்டியை குறைக்கச் சுலபமாக இருக்கும்.

**Jey Ahamparam.**

உதாரணமாக:-

உங்கள் Credit Card Balance $5000.00 எனக் கொள்வோம்.

குறைந்தளவு மாத payment $100.00 ஆகும்.
வருட வட்டி வீதம் - 14% என்க.

மேற்படி $100.00ஐ ஒரு மாதத்திற்கு கட்டி வருவீர்களாயின் 76 மாதங்களின் பின் உங்கள் Balance முற்று முழுதாகக் கட்டி முடியும். அதே வேளை நீங்கள் $2547.85 வட்டியாக மாத்திரம் கொடுப்பனவு செய்திருப்பீர்கள்.

ஆனால், இதே $100.00ஐ, $50.00ஆக 2 தரம் மாதத்திற்கு செலுத்துவீர்களாயின் கட்டி முடிக்கும் போது $339.01ஐ வட்டியில் சேமித்து இருக்கலாம். மேலும் 10 மாதம் early ஆக கட்டி முடித்திருக்கலாம். ஆகவே நாம் எல்லோரும் எமது Mortgageஇற்கு 2 கிழமைக்கு ஒரு தரம் pay பண்ணுகிறோம். வட்டியை குறைப்பதற்காகவும் கடன்பெற்ற முதலில் இருந்து கூடுதலாக கழிபடுவதற்காகவும், அதே போல இனி வரும் காலங்களில் எமது Credit Cardகளிற்கு இதே வழியை பயன்படுத்துவது சேமிப்பதற்கு ஒரு சிறந்த வழியாகும். சிறுதுளி பெருவெள்ளம். எனவே தேவையில்லாமல் கொடுப்பனவு / செலவு செய்வதை தவிர்ப்பது சிறந்ததல்லவா?.

அடுத்த இதழில் RRSPஇல் சேமிப்பதன் நன்மைகள்


THE CHILDREN EDUCATION TRUST OF CANADA
(CET)
சீலன். A
416-451-0271

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறுதொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் வருடத்திற்கு **$400 இலவசம்**

அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்புத் திட்டம். (R.E.S.P)



* The Scotia Bank
* The Royal Trust
* Grant Thornton

**TWO YEARS DIPLOMAஐ** வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

இன்னும் பல சலுகைகள் உண்டு

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்

இலவச ஆலோசனைகள் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால் அதனால் பாதிக்கப்படுவர்கள் நமது பேரக் குழந்தைகளே!


## தெரிந்து கொள்ளுங்கள்

- அட்லாண்டிக் கடலில் கேபிள் (cable) தந்திக் கம்பியைப் போட்ட முதல் கப்பல் தி கிரேட் ஈஸ்டரன் (The Great Eastern) என்ற கப்பலாகும்.
- உலக மக்கள் வசிக்கும் தனித்து நிற்கும் பகுதி தென் அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள ட்ரிஸ் டான்டா - குஹா (Tristan da cunha) தீவு.
- மெஸ்ஸனா நீர்ச் சந்தி (tne strait of Messian) தான் CCLத் தீவையும், இத்தாலித் தீவையும் இணைக்கிறது.


PRIVATE TUITION CLASSES
**PROFESSIONAL ACADEMY INC.**
2466 Eglinton Ave. E. Unit 10,
Scarborough ON M1K 5J8 (Rainbow Village)
(Midland/Eglinton - 3 Minutes Walking Distance from Kennedy Subway)



**MONDAY TO FRIDAY**
**5:00PM - 10:00PM**
**SATURDAY & SUNDAY**
**9:00 AM - 9:00 PM**

INDIVIDUAL ATTENTION TO EACH STUDENT

WE WILL EXCEED YOUR EXPECTATION



YOUR ACHIEVEMENT IS OUR GOAL

CLASSES CONDUCTED BY EXPERIENCED GRADUATES & POST GRADUATES.
CHAPTERS BASED ON CANADIAN CURRICULUM.

GRADES 6 TO 12
**MATHEMATICS**
CALCULUS, ALGEBRA
GEOMETRY & FINITE MATH

GRADES 6 TO 10
**SCIENCE**
BIOLOGY, CHEMISTRY & PHYSICS

**ENGLISH & FRENCH**

T.P: 416-264-6507 FAX: 416-264-6500





எதற்காக?

'ஏன்? தேவையே இல்லையே'!

பிந்தி விட்டீர்களா?

முற்றிலும் இலவசம்!
2001 வருமான வரி
LIBERTY INCOME TAX
2379 Eglinton Ave. E. (at Kennedy) 416-750-0039
3573 Sheppard Ave. E. (at Birchmount) 416-297-7473
முற்றிலும் இலவசம்!

**LIBERTY INCOME TAX**
உடனடி வருமான வரி மீளளிப்பு இல்லம்

Scarboroughல்
2379 Eglinton Ave. E. (Kennedy சந்திப்பில்) 416-750-0039

3573 Sheppard Ave. E. (Birchmount சந்திப்பில்) 416-297-7473

February ல் இருந்து திறக்கப்படும் கிளைகள்:
WAL★MART - Agincourt 416-297-7473
WAL★MART - Scarborough Town Centre 416-297-7473

# தூறல்

## சொல்ல மறந்த கதை

<u>நாஞ்சில் நாடன்</u>

தமிழின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களுள் ஒருவர். இவரது படைப்புக்கள்:-

**நாவல்கள்:**

தலைகீழ் விகிதங்கள் 1977
என்பிலதனை வெயில்காயும் 1979
மாமிசப் படைப்பு 1981
மிதவை 1986

**சிறுகதை:**

தெய்வங்கள் ஓநாய்கள் ஆடுகள் 1981
வாக்குப் பொறுக்கிகள் 1985
உப்பு 1990
பேய்க்கொட்டு 1994

"உங்களுடைய மனிதர்கள் அகலாகத் திரண்டு நடமாடியது போல் வேறு யாரும் தெற்கேயிருந்து நடமாட இல்லை" என்கிறார் கல்யாண்கி. இவ்வாறு புகழ் பெற்ற நாஞ்சில் நாடனின் "தலை கீழ் விகிதங்கள்" என்ற நாவல், நாவல் எழுதப்பட்டு சுமார் 23 வருடங்களின் பின்னர் மற்றுமொரு நாவலாசிரியரும், இலக்கியவாதியும், ஒளிப் பதிவாளருமான தந்தர் பச்சனினால் திரைப்படமாகியுள்ளது.

**தந்தர் பச்சன்**

ஏற்கனவே அழகி என்ற படத்தை நெறியாள்கை செய்து மிகவும் சிறப்பாக அறியப்பட்டவர். செப்புப்புலம் என்னும் பதிப்பகத்தையும் நடாத்தி வருகின்றார். சினிமா என்னும் மொழியை நன்கறிந்தவர் ஒளிப்பதிவாளர்.

## வானரன்

**நாவலும் கதையும்**


பல நாவல்கள் காலத்துக்குக் காலம் படமாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஜெயகாந்தனின் நாவல்கள் 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்', 'புதுச் செருப்பு கடிக்கும்' போன்றன. இவற்றுள் ஒரு சில பிரபல இயக்குனரான பீம்சிங்கால் நெறியாள்கை செய்யப்பட்டன. 1947இல் பிரபல ஆங்கில நாவலாசிரியரும், தமிழருமான அமரர் R.K நாராயணனின் Mr. Shampath என்ற நாவல் மிஸ். மாலினியாக A.V.M ஆல் மாற்றப்பட்டது. கொத்த மங்கலம் சுப்புவின் "தில்லான மோகனம்பாள்" 1968இல் திரைப்படமானது. கல்கியின் 'கள்வனின் காதலி' (1955) சிவசங்கரியின் "47 நாட்கள்" ஜானகி ராமனின் "மோகமுள்' போன்ற பல.

நாவலை வாசகன் உள் வாங்கும் தன்மை வித்தியாசமானது. ஆனால் திரைப்படம் கண்முன்னே காட்டப்படும் காட்சிப் படிமங்களால் அதன் கருவூலங்கள் உள் உணர்வில் பதிகின்றன. நாவலை ஒவ்வொரு வாசகனதும் வித்தியாசமாக உள் வாங்குவர். அத்தனையும் ஒருங்கே திரைக்கு கொண்டு வரமுடியாது. இதனால் பல நாவல்கள் திரைப் படங்களால் மாற்றப்படும் பொழுது தோல்வியைத் தழுவியுள்ளன. அல்லது விமர்சகர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளன.

சொல்ல மறந்த கதை

இந் நிலையில் நாஞ்சில் நாடனின் 'தலைகீழ் விகிதங்கள்' எந்த வித மாற்றமும் இல்லாமலேயே திரைப் படமாக்கியுள்ளார் தந்தர் பச்சான். வீட்டோட மாப்பிளையாக போகும் நாயகன் சந்திக்கும் பிரச்சினைகளே கதை. புதிதாக எதுவும் சொல்லப்படவில்லையாயினும் புத்தம் புது மலர் ஒன்றை அழகாக மாலையாக மாற்றியுள்ளார்கள்.

நடிகர்கள் - சேரன், ரதி, யுவராணி, மணிவண்ணன், ஜனகராஜ், பிரமிட் நடிகரான



புஷ்பவனம் குப்புசாமி. நல்ல தேர்வு அனைவரும் சிறப்பாக நடித்துள்ளனர். ஒரு சில காட்சிகள் தவிர ஏனைய காட்சிகள் அனைத்தும் மிகவும் யதார்த்தமாக உள்ளன. (பாடல் காட்சிகளை தவிர்த்து) அசத்தலான பின்னணி இசை. இளையராஜாவின் தனிச் சிறப்பு.



தமிழ்த் திருமணம் என்று கூறிவிட்டு தாலி கட்டுவதை தவிர்த்திருக்கலாம். கி. ராஜ நாராயணன், நெடுமாறன் என்ற நிஜமான மனிதர்கள் (கி. ராஜ நாராயணன் மிகவும் குறிப்பிடத்தக்க தமிழ் எழுத்தாளர்) வந்து போகிறார்.

வழமையான சினிமா இரசனைக்கு தமிழ் சினிமா விதிகளை மீறி எடுக்கப்பட்டுள்ள ஒரு கவிதை.



இவ்வாறான படங்களின் வருகையே நல்ல சினிமா இரசனையையும் வளர்க்கும். ஆனந்தவிகடன் குறிப்பிட்டது போல் ஒரு compromiseஇற்கு தந்தர்பச்சன் போயிருந்தாலும் அவரது நோக்கம் நல்ல திரைப் படங்களை கொண்டு வருவதே. அந்த வகையில் அடுத்த படத்தை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.


**MEENAAS ASTRO மீனாஸ் அஸ்ரோ**

* எவ்வயதினருக்கும் மிக துல்லியமான கணிதமூலம் ஜெனன ஜாதகம் வாக்கியம் / திருக்கணித பஞ்சாங்க அடிப்படையில் வயதுடன் தசாபுத்தி காலங்களுடனும் கலாசக்கர திசை விபரங்களுடனும், குரு, சனி, இவர்கள் சோட்சாரப் பலன்களுடனும் ஜாதகம் கணித்துக் கொள்ளலாம்.
* கிரகநலை எண்சோதிட முறைப்படி விவாகப்பொருத்தம், கம்பியூட்ட ஜாதக சாப்ட்வெயர் மூலம் கணித்துக் கொள்ளலாம்.
* தங்கள் தங்கள் மரபுக்கு ஏற்ப மணமக்களை சேர்த்துக் கொள்வதற்கும் (ரொரன்ரோ வாழ் தமிழீழ மக்களுக்கு இலவசமாக திருமணம் நிச்சயித்துக் கொள்வதற்கும்)

**சோதிடர் பொன். எஸ். சேகர்:- 416-398-3864 / 416-706-7968**
fax: 416-630-9498 E-mail: meena_astro@hotmail.com


**கலைமகள் புத்தக நிலையம்**

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல


துரித பணமாற்றுச் சேவை

**594 PARLIAMENT ST. , TORONTO, ONT.**
**(416) 921-5018**


**தமிழர் நிர்வாகத்தில் ஒரு**
**EMBASSY**



விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்



* வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
* இலங்கை /. இந்திய இனிப்புப் படையல் (Sweets)
* இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



சமோசாவிற்கு அழையுங்கள்: 416-332-0944

**5 SAMOSA - $1.00**

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough
**416-332-8451**

# FIFA WORLD PLAYER - 2002 உதைபந்தாட்டம்


## விளையாட்டுத் தகவல்கள் - 113






உலகத்திலேயே அதிகூடிய பணப் பெறுமதி வாய்ந்ததும் அதி கூடிய : National Coaches (தேசிய நாட்டுப் பயிற்றுனர்கள்) வாக்களிக்கப்பட்டும் (சுதந்திரமான) விருதுக்ள் வழங்கப்படும் என்றால் FIFA விருதுகள் ஆகும் என்றால் மிகையாகாது. மார்கழி 17ஆம் திகதி ஸ்பெயின் நாட்டில் Madrid தலைநகரில் FIFA world player 2002 ஆண்/பெண் மற்றும் out standing achievements விருதுகள் தேசிய (National Team) அணிகளுக்கும் வழங்கப்படவுள்ளன. இந்த வைபவம் 200 நாடுகளில் பல பில்லியன் தொலைக்காட்சி இரசிகர்களினால் இரசிக்கப் படவுள்ளது.

*FIFA world player of the year 2002 Kahn, Ronaldo or Zidane?*



தற்போது ஆறு பெயர்கள் பிரபல்யமாக அடிபடு கின்றன. The best foot-ballers of 2002 இறுதியாக King or Queen? 12வது Annual Gala மார்கழி 17ஆம் திகதி முடிவுகள் தெரிந்து விடும்! ஆண்களில் ஜேர்மனியைச் சேர்ந்த Kahn? அல்லது பிரேசிலைச் சேர்ந்த Ronaldo? பிரான்ஸ்சைச் சேர்ந்த Zidane? இதில் முக்கியமாக Kahn இற்கும் Vs Ronaldo இற்கும் போட்டி முக்கியமாக நிலவுகின்றது! பெண்களில் அமெரிக்காவைச் சேர்ந்த Mia Hamm இற்கா அல்லது ஜேர்மனியைச் சேர்ந்த Birgit Pirinz இற்கா? அல்லது சீனாவைச் சேர்ந்த Sun Wen இற்கா என்பது விளம்பரம் அரை மாத இதழ் உங்கள் கையில், மார்கழி 17ஆம் திகதி தவழும் போது தெரிந்து விடும்!.

நடந்து முடிந்த உலககிண்ணப் போட்டிகளில் மிகவும் துல்லியமாக முதன் முதலில் கணித கணிப்பின் மூலம் "விளம்பரம்" பத்திரிகையே பிரேசில் தான் வெல்லும் என்று கூறியது யாவருக்கும் நினைவிருக்கலாம். உலக கிண்ணப் போட்டிகள் முடிவுற்ற பின்பு விளம்பரம் பத்திரிகையின் ஆணித்தரமான கணிப்பு நிரூபணமாகியது உண்மை. இந்த "விளம்பரம்" பத்திரிகையின் கணிப்பை TVI தமிழ் தொலைக்காட்சி மூலமும், CTR தமிழ் ரேடியோ மூலமும் பல தமிழ் இரசிகர்களுக்கு ரொறன்ரோவில் எடுத்தியம்பிய முதல் பத்திரிகை "விளம்பரம்" என்றால் மிகையாகாது.

யூன் 30ஆம் திகதி 2002 ஆண்டு Janeiro பிரேசில் நாட்டில் இச்சித்திரம் தீட்டப்பட்டது. இதே நாள் பிரேசிலில் தேசிய விடு முறையாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஏனெனில் பிரேசில் இதே தினத்தில் ஜேர்மனியை 2-0 என்று வென்றதன் மூலம் முதன் முதலில் 5 தடவைகள் FIFA World Cupஐ வென்றது என்ற புகழ் பெற்றுள்ளது. Team of The Year என்ற விருதுக்கு இம் முறை பிரேசிலும், செனாகல் நாடும் போட்டியில் முன்னனியில் திகழ்கின்றன. செனகால் நாடு இம்முறை எல்லோரையும் ஆச்சரியத்திலும், அதிர்ச்சி யிலும் தமது திறமை மூலம் உலகத்திற்கு எடுத்துக் காட்டினார்கள் என்பது உண்மை. 1994 தொடக்கம் 1999ஆம் ஆண்டு வரை பிறேசில் Team of the year என்ற விருதை வென்றது. செனாகல் African Winner என்ற விருதைப் பெற்றது. 1996ஆம் ஆண்டு South Africa உம் 1999ஆம் ஆண்டு நைஜீரியாவும் *(Nigeria)வும் முன்பு இவ் விருதை வென்றன என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.



2001ஆம் ஆண்டு 70 மில்லியன் டொலருக்கு Real Madrid கழகத்திற்க விளையாடு வதற்காக Zidane கையெழுத்து வைத்தார். பிரான்ஸ் Juventus கழகத்திற்கு விளையாடி 1998/2000 ஆண்டுகளில் FIFA Player Of The Year விருதை வென்ற Zidane 1998 உலககிண்ணத்தை பிரான்ஸ் வென்றதிற்கும், 2000 ஆண்டு ஐரோப்பிய கிண்ணத்தை பிரான்ஸ் வென்றதற்கும் முக்கிய காரணகர்த்தாவாக விளங்கினார். ஆனால் பலத்த எதிர்பார்ப்புகளுடன் களம் இறங்கிய Zinedane 2002 காயம் காரணமாக தனது திறமையை வெளிக்கொணரத் தவறிவிட்டார் என்றே கூறவேண்டும். பிரான்ஸ் 1-0 என்ற கோல் ரீதியில் செனாகலுடனும், 0-0 என்ற கோல் ரீதியில் உருகுவேயுடன் சமன் செய்ததாலும் அடுத்த சுற்றுக்கே தெரிவாகாமல் வெளியேற்றப் பட்டது யாவரும் அறிந்ததே.




**எஸ். கணேஷ்**



17 வயதில் USA 94 உலகிண்ணப் போட்டி களில் கதிரையில் அமர்ந்து பிரேசிலின் Romario, Bebeto ஆகியோரின் ஆட்டங்களைக் கண்டு களித்த இந்த இளம் வாலிபன் Ronaldo 1996ஆம் ஆண்டும் 1997ஆம் ஆண்டும் தொடர்ச்சியாக FIFA விருதுகளை வென்றார். 1998ஆம் ஆண்டு Zidane உடன் போட்டி போட்டு இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். ஆனால் 2002 இல் பிரேசில் உலகிண்ணத்திற்கு தேறும் என்ற ஐயம் நிலையில் இருந்த வேளையில், காயம் உற்ற போதிலும் தற்போதும் 25 வயதுடைய Ronaldo பிரேசில் அணியை இறுதியாட்டத்தின் வெற்றியின் விளிம்பிற்கே கொண்டு வந்து இரண்டு கோல்களை இறுதியாட்டத்தில் போட்டது மட்டுமல்லாமல் மொத்தமாக 8 கோல்களை போட்டு Adidas Golden Shoe விருதையும் வென்றெடுத்தார்.

உலகத்தில் பல தடவைகள் உலககிண்ண இறுதியாட்டத்தில் தோன்றிய ஒரே ஒரு அணி ஜேர்மனியாகும். இதுவைர மூன்று தடவைகள் உலககிண்ணத்தை வென்ற ஜேர்மன் அணி இது வரை 7 தடவைகள் இறுதியாட்டத்திற்கு தோன்றியுள்ளது. ஆனால் இம்முறை கடவுள் ஜேர்மனியைக் கைவிட்டு விட்டார் என்றே கூறவேண்டும்.



காரணமாக இழந்த நிலையில் ஜேர்மன் அணி உலக கிண்ணத்திற்கு பயணமானது. ஆனாலும் எவருமே எதிர்பார்க்காத வகையில் கோல்காப்பளார் Kahn இன் திறமை மூலமும் ஜேர்மன் வீர்களின் 'கடவுள் தந்த கொடை'யான 'நெஞ்சுரம்' மூலமும் மீண்டும் ஜேர்மனி அணி இறுதியாட்டத்தில் தேர்வுற்றது. இதற்கு முக்கிய காரணம் ஜேர்மன் கோல்காப்பாளர் கான் என்றுதான் கூறவேண்டும். இம்முறை உலககிண்ணப் போட்டிகளில் 12 வருட சரித்திரத்தில் ADI-DAS Golden Ball - Mup (Best Player), சிற்றரோல் கால்காப்பாளர் (Yashin Award) ஆகிய இரு விருதுகளையும் ஒரேயடியாக வென்ற முதலாவது வீரர் கான் ஆகும். 1994ஆம் ஆண்டு உலககிண்ணப் போட்டிகளில் பிரத்தியேக (Reserve) கோல் காப்பாளராக தேறிய இவர் 1994 இல் இருந்து Bayern Munich இக் கழத்திற்கு விளையாடி வருகின்றார். 2000 ஆண்டு Best European கோல் காப்பாளர் என்ற விருதையும், 2000 ஆண்டு Best European கோல் காப்பாளர் என்ற விருதையும், 2001ஆம் ஆண்டு 4 தடை-வகள் German Leauge Titleஐ வென்றெடுத்தார் என்ற விருதையும், 2001 ஆம் ஆண்டு UEFA Champions League கிண்ணத்தை வென்றெடுத்தவர் என்ற விருதையும் பெற்ற இவர் இரண்டு FiFA விருதுகளை வென்ற உலகத்திலேயே ஒரே ஒரு கோல் காப்பாளர் என்ற முதன்மையும் பெறுகின்றார்.

இவர்களில் யார் இந்த விருதை வெல்லப் போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்!!! இதுவரை FIFA விருதை வென்றவர்களின் பட்டியலை இங்கு பார்ப்போம்.

FIFA Men's player

2001
1. Luis Figo  2. David Beckham
3. Raul  Coaches voting: 130

2000
1. Zinedine Zidane  2. Luis Figo
3. Rivaldo, Coaches voting: 150

1999
1. Rivaido  2. David Batistuta
3. Gabriel Batistuta  Coaches voting: 140

1998
1. Zinedine Zidane  2. Ronaldo
3. Dennis Bergkamp
Coaches voting: 132

1997
1. Ronaldo  2. Roberto Carlos
3. Dennis Bergkamp zinedine Ziane
Coaches voting: 121

1996
1. Ronaldo  2. George Weah
3. Alan Shearer  Coaches voting: 120

1995
1. Geroge Weah  2. Paolo Maldini
3. Jurgen Klinsmann
Coaches voting: 95

1994
1. Romario  2. Hristo Stoitchkow
3. Roberto Baggio
Coaches voting: 83

1993
1. Roberto Baggio  2. Romario
3. Dennis Bergkamp
Coaches voting: 71

1992
1. Marco Van Basten
2. Mristo Stoitchkov
3. Thomas Hassler
Coaches voting: 71

1991
1. Lothar Mathaus
2. Jean - Pierre Papin
3. Gary Lineker
Coaches voting: 66


**தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்**

**ரவி நடராஜா**

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்  * மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்



(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON

# விண்வெளி

115

கனி



## நட்சத்திரங்கள்

பாலன் பிறப்பு ஆராதனைகள் பரவலாக எல்லா இடங்களிலும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இந்நேரத்தில் வருகின்ற நத்தார் தினக் கொண்டாட்டங்களும் தொடர்ந்துவரும் புதுவருடக் கொண்டாட்டங்களும் மிகச் சிறப்புடன் நடைபெற எல்லோருக்கும் 'கனி'யின் மனநிறைவான வாழ்த்துக்கள். மகிழ்வுடனும் மனநிறைவுடனும் வருங்காலத்தில் நாம் எல்லோரும் இருப்போம் என நம்புவோம். தாயக நிலைமைகள் சீர்பெறவும், தாயகத்தில் நம்மவர் நிலை எல்லா வகைகளிலும் மேம்பட வேண்டும் எனவும் இச் சிறப்பான நாட்களில் இறைவனை வேண்டுவோம்! அதற்காக நம்மால் இயன்றவரை ஆக்க பூர்வமாக உழைப்போம்.

